கூடுதல் மாவட்ட நீதிமன்றம், சிவகங்கை.

முன்னிலை: **திரு.பெ.பார்த்தசாரதி, பி.எல்,**

கூடுதல் மாவட்ட நீதிபதி, சிவகங்கை

2025–ம் ஆண்டு நவம்பர் திங்கள் 11–ம் நாள் செவ்வாய்க்கிழமை

2056 திருவள்ளுவர் ஆண்டு, விசுவாவசு வருடம், ஐப்பசி திங்கள் 25–ம் தேதி

இடைநிலை மனு எண்.8/2024

இன்

அசல் வழக்கு எண்.76/2021

* * * * *

வ.பிரியா ... மனுதாரர்/வாதி

/ எதிர் /

A. அண்ணபூரணி ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு இந்நீதிமன்றத்தில் 01.11.2025ம் தேதி என் முன்னர் இறுதி விசாரணைக்கு வந்த போது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.சந்திரசேகரன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக கருதப்பட்டுள்ளார். மனுதாரர்/வாதி தரப்பு வாதம் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இதுநாள் வரையில் என் பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**உ த் த ர வு**

இம்மனுவானது அசல் வழக்கில் கடந்த 20.12.2024–ம் தேதி வாதுரைக்காக ஏற்பட்டுள்ள வாய்தாவை மீண்டும் Reopen செய்ய கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனுவின் சுருக்கம் :–**

2(i). மனுதாரர் அசல் வழக்கில் வாதி. தாவா சொத்துக்களை பிரதிவாதி கடந்த 03.02.2021–ம் தேதி 3rd பார்ட்டி ராமைய்யா மகள் R.புஷ்பா என்பவருக்கு

P PARTHASARATHY Digitally signed by P PARTHASARATHY Date: 2025.11.11 17:23:14 +0530

ரூ.15,00,000/– ரிஜிஸ்டர்டு ஈடு வைத்து கடன் பெற்று இருந்துள்ளார். மேற்படி ஈடு கடனுக்குரிய அசல் வட்டியை திருப்பிச் செலுத்துவதற்காகவும், வேறு சில கடன்களை தீர்ப்பதற்காகவும், இந்த நம்பர் வாதியிடம் தாவா சொத்துக்களை கிரையம் பேசி நிச்சயித்து 22.07.2021–ம் தேதி ரூ.25,00,000/– கிரைய அட்வான்ஸ் பெற்றுக் கொண்டு வாதியும், பிரதிவாதியும் சேர்ந்து ஓர் கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டு இருந்தார்கள். அதே தேதியில் 22.07.2021–ம் தேதியில் இந்த வாதியிடம் கூறப்பட்டுள்ளவாறு கிரைய அட்வான்ஸ் வாங்கிய பணத்திலிருந்து மேற்படி R.புஷ்பாவிற்கு (3rd பார்ட்டி) 03.02.2021–ம் தேதியிட்ட ஈடு கடனுக்குரிய அசல், வட்டியை பத்திரபதிவு அலுவலகத்தில் செல் ரசீதும் பதிவு செய்துள்ளார். மேற்படி விபரங்களை மறைத்து பிரதிவாதியும், இந்த வாதியிடம் திட்டமிட்டு மறைத்து விட்டார். மேற்படி உண்மைகள் இந்த வாதிக்கு தற்சமயம் வழக்கு விசாரணையின் போது தான் தெரியவந்தது. வாதியும் மேற்படி ஈடுகடன் மற்றும் செல் ரசீது ஆவணங்களை சிங்கம்புணரி பத்திரப் பதிவு அலுவலகத்தில் சான்றிட்ட நகல் எடுத்துப் பார்த்து தெரிந்து கொண்டார். மேற்படி ஆவணங்கள் தாவா வழக்கிற்கு மிகவும் முக்கியமான ஆவணங்கள். அந்த விபரங்கள் வழக்குரையில் குறிப்பிடப்படவில்லை.

2(ii). எனவே மேற்படி விபரங்களை வழக்குரையில் திருத்தம் செய்வதற்கு மனுதாரர்/வாதி இடை நிலை மனு எண்.7/2024 மனு செய்து இருந்தததில் மேற்படி மனு கடந்த 20.11.2024–ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுவிட்டது. மேற்படி உத்தரவிற்கு எதிராக மனுதாரர்/வாதி சென்னை உயர்நீதிமன்ற மதுரைக் கிளையில் மேல்முறையீடு தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறார். மேலும் இடைநிலை மனு எண்.7/2024–ல் கடந்த 20.11.2024–ம் தேதி பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் சான்றிட்ட நகல்கள் C.A.No.4432 யாதாஸ்து தாக்கல் செய்தும் மனுதாரர் வாதிக்கு சான்றிட்ட நகல் கிடைக்கவில்லை. இந்நிலையில் அசல் வழக்கில் பிரதிவாதி தரப்பிற்கு சாட்சி விசாரணையை கடந்த 18.12.2024–ம் தேதி முடித்துக் கொண்டுவிட்டார். எனவே அசல் வழக்கு

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.11 17:23:24 +0530

வாதுரைக்காக ஏற்பட்டுள்ள வாய்தாவை Reopen செய்ய வேண்டியது அவசியமாக இருக்கிறது. ஆகவே இம்மனுவானது அசல் வழக்கில் கடந்த 20.12.2024–ம் தேதி வாதுரைக்காக ஏற்பட்டுள்ள வாய்தாவை மீண்டும் Reopen செய்ய கோரி மனுதாரரால் உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்சமாக கருதப்பட்டுள்ளார்.

4) இந்த மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனையானது இம்மனுவை அனுமதிக்கலாமா? இல்லையா? என்பதே ஆகும்.

5) இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. மனுதாரர்/வாதி சார்பில் இடைநிலை மனு எண்.7/2024 மனு தாக்கல் செய்து கடந்த 20.11.2024–ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. மேற்படி உத்தரவிற்கு எதிராக மனுதாரர்/வாதி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் மேல்முறையீடு செய்து நடவடிக்கை செய்து வருகிறார். எனவே அசல் வழக்கில் இருதரப்பு வாதுரைக்காக போட்டுள்ளதை ரீஓபன் செய்ய வேண்டுமென்றும் சொல்லியுள்ளார்.

6) மேற்படி இடைநிலை மனு எண்.7/2024 ஆனது மனுதாரர்/வாதி தாவா வழக்குரையில் திருத்தம் செய்து வழக்கை மேல்நடத்த வேண்டி மனு தாக்கல் செய்ததில், மேற்படி மனு கடந்த 20.11.2024–ம் தேதி தள்ளுபடி செய்யப்பட்டது. தற்போது மேற்படி இடைநிலை மனு எண்.7/2024 மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு ஒரு வருடம் ஆக போகும் நிலையில் மனுதாரர்/வாதி மேல்முறையீடு செய்து நடவடிக்கை எடுத்திருப்பார். இந்நிலையில் இடைநிலை மனு எண்.9/2025–ம் நிலுவையில் உள்ளது. எனவே நீதியின் நலனை கருத்தில் கொண்டு இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது.

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.11 17:23:31 +0530

**இறுதியாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

*இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்தர் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் சுருக்கெழுத்து வடிவில் எடுத்துக் கொள்ளப்பட்டு, பின்னர் அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் சரிபார்க்கப்பட்டு, இன்று 2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 11-ம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது*

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.11 17:23:38 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு
சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் – **இல்லை**.

P PARTHASARATHY
Digitally signed by P PARTHASARATHY
Date: 2025.11.11 17:23:43 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி,
சிவகங்கை.

**கூடுதல் மாவட்ட நீதிமன்றம்**

**சிவகங்கை**

**இடைநிலை மனு எண்.8/2024**
**இன்**

**அசல் வழக்கு எண்.76/2021**

**நாள்.11.11.2025**